பக்கங்கள்:-28

# காலை முரசு


| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 16 | சனிக்கிழமை | 29.06.2024 | அதிர்வு 333 |

## ஆற்றில் நீராடச் சென்ற மூதாட்டி சடலமாக மீட்பு

(எம்.எவ்.எம்.அலி)

பலாங்கொடை – தொரவல ஆற்றில் நீராடச் சென்ற பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பலாங்கொடை, முகுனுமலை 06



# சிறீதரன் எம்.பிக்கு அச்சுறுத்தல்!

### அவரின் வீட்டுக்கு முன்பாக மோட்டார் சைக்கிள்களில் முகமூடி அணிந்த மர்மநபர்கள் பட்டப்பகலில் நடமாட்டம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தின் முன்பாக இனந்தெரியாத நபர்களின் அச்சுறுத்தும் வகையிலான நடமாட்டம் நேற்று அவதானிக்கப்பட்டுள்ளது. 06

## வாள்கள், கைக்கோடரிகளுடன் யாழில் மூவர் நேற்று சிக்கினர்

### வன்முறைக் கும்பல் எனப் பொலிஸார் சந்தேகம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – கோண்டாவில் பகுதியில் ஆயுதங்களுடன் மூன்று பேர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து வாள்கள் மற்றும் கைக்கோடரிகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

பருத்தித்துறையைச் சேர்ந்த 24 வயதான மூவர் கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு அருகில் கூடியிருந்தபோது இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் வன்முறையில் 06




கொவிட் காலத்தில் யாழ்குடா நாட்டில் அரசின் நிவாரணப்பொருள்களை தனது சொந்த நிவாரண அன்பளிப்பாக வழங்கிய பிரகிருதிகளை மக்கள் அறிவார்கள்.

அந்த வகையிலான – ‘பச்சை தண்ணீரில் பலகாரம் சுடும்’ அல்லது ‘வழித் தேங்காயைத் தெருப் பிள்ளயாருக்கு உடைக்கும்’ விடயம் பற்றிய தகவல் இது.

கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக்க பெரேராவை எல்லோருக்கும் தெரியும். இப்போது அவர் எம்.பி. முன்னர் மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக இறங்குவார் எனப் பேசப்பட்டவர். அவர் தமது தம்மிக்க பெரேரா கல்வி நிறுவனத்தால் நடத்தப்பட்ட வகுப்புகளை ஒட்டி, 06




# பொருளாதாரத்தை மீட்க முடியாது போயிருந்தால் இலங்கை மற்றுமொரு கென்யாவாக மாறியிருக்கும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“பொருளாதாரப் பிரச்சினை காரணமாக கென்யா பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. அதனால் கொலைகளும் இடம்பெற்று வருகின்றன. நாடொன்றின் பொருளாதாரத்தைத் தயார்படுத்துவது மிகவும் அவசியமானது. நாட்டுக்குள் பொருளாதார நிலைமை ஏற்படுத்த தவறியிருந்தால், இலங்கையின் நிலைமையும் அவ்வாறுதான் இருந்திருக்கும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் விழாவில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –


“காலநிலை மாற்றத்தை எந்தவொரு நாடும் தனியே எதிர்கொள்ள முடியாது. அதற்காக அனைத்து நாடுகளும் இணைந்து செயல்பட வேண்டும். ஆனால் இந்த திட்டத்தை நாம் ஆரம்பித்தாலும், சில மேற்கு நாடுகள் அதிலிருந்து விலகி இருக்கின்றன. அன்று இங்கிலாந்து பிரதமர் பொரிஸ் ஜோன்சன் கிளாஸ்கோ பிரகடனத்தை வெளியிட்டார்.

ஆனால் இன்று பிரித்தானிய அரசாங்கம் அதனை விட்டு வெளியேற முயல்வதை ஒரு சிறந்த உதாரணமாகச் சுட்டிக் காட்டலாம். எனினும், இந்த விடயத்தில் அமெரிக்காவின் முடிவை நவம்பரில் நடைபெறும் தேர்தலுக்குப் பிறகுதான் தெரிந்துகொள்ள முடியும்.

ஆனால் இந்த இலக்கை நோக்கி எப்படி பயணிப்பது என்பது குறித்து கவனம் செலுத்த வேண்டும். இதற்கு அதிக பணம் தேவைப்படுகிறது. ஆபிரிக்கா மற்றும் ஆசியாவின் பல நாடுகள் கடனில் உள்ளன. அந்த நாடுகள் கடன் நிவாரணம் கேட்டுள்ளனர். ஆசியாவின் கடன் நிவாரண கோரிக்கையை நான் ஆதரிக்கவில்லை.

இலங்கையின் கடன் பிரச்சினையை எம்மால் தீர்க்க முடியும் என நான் சுட்டிக்காட்டினேன். ஆனால், ஆபிரிக்காவில் குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் கடன்களை முற்றிலும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை தற்போது முதல் படியை எடுத்துள்ளது. அதன்படி, நாம் வங்குறோத்து நிலையில் இருந்து மீண்டுள்ளோம். இப்போது பொருளாதார மாற்றச்

தொடர்ச்சி▼












# பொருளாதாரத்தை மீட்க முடியாது போயிருந்தால் இலங்கை மற்றுமொரு கென்யாவாக மாறியிருக்கும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

சட்டத்தை நிறைவேற்றி அந்தப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். ஆனால் ஆபிரிக்கா போன்ற நாடுகள் அந்த செயன்முறையைச் செய்வது கடினம்.

எனவே, அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். குறிப்பாக ஆபிரிக்க நாடுகளின் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய இலங்கை காலநிலை மாற்ற மாநாட்டில் முன்மொழிந்தது.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள நிதி ஒதுக்கீடுகள் அவசியம். இதற்குத் தேவையான பணம் இது வரை கிடைக்கவில்லை. ஆனால் மேற்கத்திய நாடுகள் சுமார் 100 பில்லியன் டொலர்களை உக்ரைன் போரிலும் காஸா போரிலும் செலவு செய்துள்ளன. ரஷ்யா எவ்வளவு செலவழித்தது என்பது எங்களுக்குத் தெரியாது. இந்தப் பணத்தை ஆபிரிக்க நாடுகளுக்கும், ஏனைய நாடுகளுக்கும் வழங்கினால், சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

யுத்தம் செய்து பயனில்லை. உக்ரைனில் போரை நிறுத்துமாறு நாங்கள் கோருகிறோம். காஸாவில் போரை நிறுத்துங்கள். அந்தப் போரை நிறுத்தி 05 வருடங்களில் பலஸ்தீன அரசை உருவாக்குங்கள். அதேபோன்று, இஸ்ரேலின் பாதுகாப்பு குறித்தும் நடவடிக்கை எடுங்கள்.

ஆனால், இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது அது பற்றிய உலகின் தெற்கில் குரல் எழுப்புவதாகும். இந்தப் போரை நிறுத்தி ஆபிரிக்க நாடுகளுக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்த நாட்களில் கென்யாவில் நடந்த கலவரங்களைப் பார்த்தோம். தற்போது சுமார் 20 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு நாட்டின் பொருளாதாரத்தை சீர்செய்யவில்லை என்றால் ஏற்படும் நிலைதான் இது. இலங்கையில் இந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்காவிடின் நாமும் இதே நிலையை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டிருக்கும்.

எனவே, இந்தப் பணத்தை அந்த நாடுகளுக்கு வழங்க வேண்டும். அதற்கு இலங்கை முழுமையாக ஆதரவளிக்கிறது. அத்தகைய உதவியை இலங்கை எதிர்பார்க்கவில்லை. இலங்கை தனது கடனை மறுசீரமைத்து முன்னோக்கிச் செல்கிறது. அதற்குத் தேவையான ஆற்றலும் அறிவும் நம்மிடம் உள்ளது. அந்தப் பாதையில் நாம் தொடர வேண்டும். அதன்போது, நாம் போட்டிமிக்க, டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்திற்கு மாற வேண்டும். நமது சக்தியுடன் அந்தப் பயணத்தை நாம் மேற்கொள்வோம்.” – என்றார்.



සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය
நலன்புரி நன்மைகள் சபை
WELFARE BENEFITS BOARD

# அஸ்வெசும கொடுப்பனவுக்கு 11.6 பில்லியன் ரூபா விடுவிப்பு

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் 2024 ஜூன் மாதத்திற்கான இடைநிலை மற்றும் பாதிக்கப்படக் கூடிய பிரிவுகளின் கீழான கொடுப்பனவுகளை 622,495 பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பு செய்வதற்காக நலன்புரி நம்பிக்கைச் சபை 11.6 பில்லியன் (ஆயிரத்து 160 கோடி) ரூபாவை விடுவித்துள்ளது.


இந்த வேலைத்திட்டத்தின் முதல் கட்டத்தில், பாதிப்புக்களை எதிர்கொண்ட பிரிவின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 5,000 ரூபா என்ற அடிப்படையில் 2023 ஜூலை மாதத்தில் இருந்து 31.03.2024 ஆம் திகதி வரையிலும், இடைநிலைப் பாதிப்புக்களை எதிர்கொண்டிருக்கும் குழுவின் கீழ் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 2,500 ரூபா என்ற அடிப்படையில் 2023 ஜூலை மாதம் முதல் 31.12.2023 ஆம் திகதி வரையிலும் கொடுப்பனவுகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட மற்றும் இடைநிலை பாதிப்புக்களை எதிர்கொண்ட பிரிவுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான விசேட கொடுப்பனவு வழங்குவதற்கான காலத்தை இவ்வருடத்தின் டிசம்பர் மாதம் வரையில் நீடிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

அதன் கீழ் பாதிக்கப்பட்ட மற்றும் இடைநிலை பாதிப்புக்களை எதிர்கொண்டவர்களுக்கான கொடுப்பனவுகளை 2024 ஜூலை முதல் 2024 டிசம்பர் வரையில் 5,000 ரூபா விசேட கொடுப்பனவை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் மிக வறுமை மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழானவர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவும் தொடர்ச்சியாக வழங்கப்படுமென நலன்புரி நன்மைகள் சபையின் தலைவரும் ஆணையாளருமான ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார்.






# கச்சதீவு, கடல் எல்லைப் பிரச்சினை: இலங்கை - இந்தியா புதிய உடன்பாடு

கச்சதீவு பிரச்சினை, பாக்கு நீரிணையில் இலங்கை – இந்திய நாடுகளின் எல்லை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இரு நாடுகளும் விரிவான உடன்பாட்டை எட்டியுள்ளன என்று அறியவருகின்றது.

இந்த உடன்பாடு எட்டப்பட்டமை தொடர்பான விடயத்தை இந்தியாவின் பிரபல ஊடகமான "த ஹிந்து"வுக்கு அதிகார பூர்வ செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்திய போதிலும் ஒப்பந்தத்தின் விவரத்தை வெளியிட மறுத்துவிட்டார் என்று அந்த நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கச்சதீவு, கடல் எல்லைகள் தொடர்பில் இரு நாடுகளும் உடன்பாடுகளை எட்டிய போதிலும் உடன்படிக்கை எதனையும் செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் அண்மையில், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கச்சதீவு விவகாரம் குறித்த பிரசாரம் பிரதான பேசுபொருளாக மாறிய நிலையில் இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

இதனிடையே, இலங்கையின் கடல் எல்லைகள் தொடர்பில் நாடாளுமன்றத்திலோ அல்லது வெளியிலோ கலந்துரையாடப்படவில்லை. 1974ஆம் ஆண்டு கச்சதீவு இலங்கைக்கு உரித்தானதாக மாறியது என்பதும் குறிப்பிடத்தக்கது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
யாழ் மாணவர்களுக்கு – இளைஞர்களுக்கு – சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வை நாளை பெரும் எடுப்பில் நடத்துவதற்குக் கையை விசுக்கிச் செலவழிக்கின்றார்.




பிறகு என்ன? அந்த நிகழ்ச்சியைத் தமது அரசியலாக்குகின்றார் நமது அமுல் பேபி. ஊரார் கணக்கில் தனது அரசியல் வேலையை பார்க்கும் தந்திரம்.

வாசகர்களே தீர்மானிக்கட்டும் என்பதற்காக இரண்டு தரப்பினாலும் ஒரே நிகழ்வுக்காக வெளியிடப்பட்ட இரண்டு வெவ்வேறு அறிவித்தல்களை இங்கு இணைத்துள்ளேன். வாசகர்களே பார்த்து முடிவு செய்து கொள்ளட்டும்.

\+ + +

சீனாவுக்கு நான்கு நாள்கள் விஜயமாகச் சென்றிருக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அங்கு சீன அதிபர் இன்று சந்தித்து விருந்தளித்து




கௌரவிக்கின்றார். இருதரப்பு பேச்சுகளும் இடம்பெறும் எனவும் தெரிகிறது.

\+ + +

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதற்காகக் குத்தி முறியும் சிவில் அமைப்பினர் இன்று வவுனியாவில் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணி உட்பட்ட தமது ஆதரவு தமிழ் கட்சிகளைச் சந்திக்கின்றனர் எனத் தகவல்.

பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் இன்று ஓர் ஒப்பந்தத்தில் – உடன்படிக்கையில் – எல்லா சாரரும் ஒப்பமிடவிருக்கின்றனர் என்றும் கூடப் பேச்சடிபட்டது.

ஆனால், முக்கிய மேற்கு நாடு ஒன்றின் தூதுவர் ஒருவர் எனக்கு வேண்டிய ஒருவருடன் நேற்று முன்தினம் இரவு பொது வேட்பாளர் விவகாரம் குறித்து விரிவாகப் பேசியிருக்கின்றார். அதற்கு முன்னர் அன்று இரவு கொழும்பில் ஐ.நா. தொடர்பான ஒரு நிகழ்வில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் பலரையும் சந்தித்து அந்தத் தூதுவர் உரையாடி இருக்கின்றார்.

தமிழரசு கட்சியில் பொது வேட்பாளரைத் தாம் ஆதரிக்கின்றார் எனப் பகிரங்கமாக கூறும் பிரதிநிதி ஒருவர் உட்பட தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் பலருடனும் அந்தத் தூதுவர் பேசியிருக்கின்றார்.

“அவர்கள் எல்லோரும் ‘பொது வேட்பாளர் திட்டம் குறித்து பேச்சளவில் நாம் ஆதரவு போல பேசுகின்றோம். ஆனால் நாங்கள் அதில் சீரியஸாக இல்லை’ என்றுதான் என்னிடம் உறுதிபடக் கூறினார்கள்” – என்று அந்தத் தூதுவர் எனக்கு வேண்டியவரிடம் குறிப்பிட்டு அது குறித்து சற்று நேரம் விவாதித்து இருக்கின்றார்.

அதை செவிமடுத்த அந்த நண்பர் – அவருக்கு வடக்கு அரசியல் பற்றி முழுமையாகத் தெரியாது போலும் – என்னுடன் பின்னர் பேசும்போது “எல்லோரும் சேர்ந்து நீதியரசருக்குக் கயிறு கொடுத்து விட்டுக் கடைசி நேரத்தில் மெல்ல கழன்று விடுவார்களோ தெரியாது” – என்றார் சந்தேகத்துடன்.

“இல்லை... இல்லை... சற்றுப் பொறுங்கள். நாளை (இன்று) அவர்கள் வவுனியாவில் உடன்படிக்கையில் ஒப்பமிட்டு தங்கள் ஆதரவை உறுதிப்படுத்துவார்கள். அதன் பின்னர் அந்தத் தகவலை உங்கள் தூதுவர் நட்பிடம் தெரிவியுங்கள்!” – என்றேன் நான்.

பார்ப்போம்... இன்று என்ன நடக்கின்றது என்று.

## ஆற்றில் நீராடச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பிரதேசத்தைச் சேர்ந்த 80 வயதுடைய பெண்ணே நேற்றுமுன்தினம் இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் நேற்றுமுன்தினம் மாலை ஆற்றில் நீராடச் சென்ற வேளை காணாமல்போனதை அடுத்து உறவினர்கள், பிரதேச மக்கள் மற்றும் பொலிஸார் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போதே அந்தப் பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காகப் பலாங்கொடை வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சூரிய சக்தியின் மூலமான மின் உற்பத்தி அதிகரிப்பு

இந்த மாத இறுதிக்குள் இலங்கையின் தேசியக் கட்டமைப்பிற்குச் சூரிய சக்தி மூலமான மின் உற்பத்தி 1,000 மெகா வோட்டாக அதிகரிக்கும் என மின் சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதில் 944 மெகா வோட் மின்சாரம் கூரை மீது பொருத்தப்பட்டுள்ள சூரிய சக்தி கட்டமைப்பு ஊடாக பெறப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருட இறுதிக்குள் கூரை மீது பொருத்தப்பட்ட சூரிய சக்தி மூலமான மின் கட்டமைப்பின் ஊடாக 1,000 மெகா வோட்டுக்கும் அதிகமான உற்பத்தியைப் பெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## சிறீதரன் எம்.பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இலக்கத்தகடுகள் மறைக்கப்பட்ட நான்கு மோட்டார் சைக்கிள்களில் முக மூடிகள் அணிந்தவாறு வருகை தந்த இனந்தெரியாத நபர்களின் நடமாட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனையும், அவரது குடும்பத்தினரையும் அச்சுறுத்தும் வகையிலான திட்டமிட்ட செயல் என்பதைக் கண்காணிப்புக் கமராக்களில் பதிவாகியுள்ள காணொளிக் காட்சிகள் உறுதிப்படுத்துகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுப் பட்டப்பகலில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பான கண்காணிப்புக் கமராக்களில் பதிவாகியுள்ள காணொலிக் காட்சிகளைச் சிறீதரன் எம்.பியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் யாழ். பொலிஸார், கண்காணிப்புக் கமராக்களில் பதிவாகியுள்ள காணொலிக் காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

## வாள்கள், கைக்கோடரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஈடுபடுவதற்குத் தயாராக இருந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் இன்று முற்படுத்த கோப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# ராஜபக்‌ஷக்களின் ஆதரவுடன் ரணில் போட்டியிட்டால் ஆபத்து

## இப்படி ராஜித எச்சரிக்கை

"வரும் ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்‌ஷக்களின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க களமிறங்கினால் வெற்றி பெறுவது சவால்மிக்கதாக அமையக்கூடும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"வரிசை யுகத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிவுக்குக் கொண்டு வந்தார். நாட்டை மீட்டெடுப்பதற்குரிய அவரின் வேலைத்திட்டங்கள் சிறப்பாக உள்ளன. அதனால் தான் ரணிலுக்குச் சார்பாக கருத்துகளை முன்வைத்து வருகின்றேன்.

நான் ஆளுங்கட்சி பக்கமா, எதிரணிப் பக்கமா என்பதை விட மக்கள் பக்கம் நிற்கின்றேன் என்பதே முக்கியம். ஆளுங்கட்சியுடன் நான் இணையவில்லை. எனினும், கருத்தியல் ரீதியில் ஒருமைப்பாடு உள்ளது. அமைச்சரவையில் அமர்வதற்கு நான் தயாரில்லை.

சஜித் பிரேமதாஸவே தற்போதைய எனது அரசியல் தலைவர். 1980 காலப்பகுதி முதலே ரணிலுடன் செயற்பட்டு வருகின்றேன். எனவே, புதிதாக இணைவதற்கு ஒன்றுமில்லை.

ராஜபக்‌ஷக்களின் ஆசியுடன் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் போட்டியிட்டால் வெற்றி பெறுவது சவாலாக அமையக்கூடும்." – என்றார்.

# கொழும்பின் பல பகுதிகளிலும் இன்று 15 மணி நேரம் நீர்வெட்டு

கொழும்பின் பல பகுதிகளில் இன்று காலை 9 மணி முதல் 15 மணித்தியால நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இதற்கமையகொழும்பு,தெஹிவளை,கல்கிஸை,கோட்டை,கடுவளை நகர சபைக்குட்பட்ட பகுதிகளிலும் மஹரகம, பொரலஸ்கமுவ நகர சபைக்குட்பட்ட பகுதிகளிலும் கொட்டிகாவத்தை, முல்லேரியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலும் இன்று காலை 9 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை 15 மணித்தியால நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த காலப்பகுதியில் மொரட்டுவை நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் குறைந்த அழுத்தத்துடன் நீர் விநியோகிக்கப்படுமென தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

மின்சக்தியூடாக முன்னெடுக்கப்படும் அத்தியாவசிய திருத்தப் பணிகள் காரணமாக அம்பத்தலே குடிநீர் சுத்திகரிப்பு கட்டமைப்பிற்கான மின் விநியோகம் தடைப்படுகின்றமை மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் காரணமாக நீர் விநியோகம் துண்டிக்கப்படவுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சட்டத்துறைக் குழப்பம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய பதவிக்காலம் இன்னும் ஏறத்தாழ 100 நாள்கள்தான்.

அதற்கிடையில் நாட்டின் நீதித்துறையை உண்டு, இல்லை என்று பண்ணி விட்டுத்தான் அவர் ஓய்வார்போல் தென்படுகிறது. அவரது தற்போதைய செயற்பாடுகளும் சில விடயங்களில் அவரின் செயற்பாடின்மைகளும் அந்தக் கருத்தைத்தான் தந்து நிற்கின்றன.

சட்டப்படி அறுபது வயதில் ஓய்வு பெற்றுச் செல்லவேண்டிய சட்டமா அதிபர் பதவிக்கு - இலங்கையின் சரித்திரத்தில் முன்பின் உதாரணம் கூட இல்லாத நிலையில் - அந்த வயது தாண்டியும் ஆறு மாத கால பதவி நீடிப்பு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒற்றைக் காலில் நின்றமையால் இப்போது கடந்த இரண்டு நாள்களாக நாட்டுக்கு சட்டமா அதிபர் என்று ஒருவர் இல்லை என்ற நிலைமை உருவாகி உள்ளது.

இந்த இரண்டு நாள்களிலும் யார் மீதும் புதிதாக வழக்குகளோ குற்றச்சாட்டுகளோ நாட்டின் நீதித்துறையால் சுமத்த முடியாது என்பதுதான் சட்ட நிலைமை. இது இன்னும் எத்தனை நாள்களுக்கு நீடிக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இத்தகைய அணுகுமுறைப் போக்குகள் எதேச்சாதிகாரமாக எவ்வளவு காலம் நீடிக்கும் என்பவை எல்லாம் ஆண்டவனுக்குதான் வெளிச்சம்.

தான் பரிந்துரைத்தவர்களை நீதியரசர்களாக நியமிக்க அரசமைப்புக் கவுன்ஸில் ஒப்புதல் அளிக்கவில்லை என்ற கோபத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஐந்து நீதியரசர்களுக்கான வெற்றிடங்கள் ஏற்பட்டும் அவற்றுக்கு யாரையும் பரிந்துரைக்காமல் காலத்தை இழுத்தடிக்கின்றார் ஜனாதிபதி.

இப்படி மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியசர்களின் ஆளணியில் காற்பங்கு வெற்றிடமாக இருப்பதை ஆட்சேபித்து சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு நேற்று பிரதம நீதியரசரைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயத்தின் முன் வந்தது எனினும், நீதிச்சேவை ஆணைக் குழுவின் தலைவர் என்ற முறையில், இந்த நீதியரசர்கள் வெற்றிடங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட கடிதங்கள், கோரிக்கைகளில் தாம் நேரடியாக சம்பந்தபட்டிருக்கின்றமையினால் இந்த வழக்கைத்தான் கவனிப்பது முறையற்றது என்று தெரிவித்து, வேறு உயர் நீதிமன்ற ஆயத்தின் முன்னால் வழக்கை எடுப்பதற்காக, நேற்று அதனைப் பிரதம நீதியரசர் ஒத்திவைத்துள்ளார்.

அரசமைப்பு கவுன்ஸிலுடன் முரண்பட்டுக் கொண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் வெற்றிடங்களுக்கு பரிந்துரைகளைச் செய்யாமல் இருப்பது போல, இப்போது சட்டமா அதிபர் விடயத்திலும் தமது கோரிக்கைப்படி பதவி நீடிப்பு வழங்காத கோபத்தில் புதிதாக ஒரு சட்டமா அதிபரை பரிந்துரைக்காமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இழுத்தடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அப்படி நடந்தால் நாட்டின் நிலைமை அதோ கதிதான். குற்றவாளிகளுக்குத்தான் கொண்டாட்டம். யாருக்கு எதிராகவும் இக்காலகட்டத்தில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்ய முடியாது. குற்றம் சுமத்தும் அதிகாரம் உடைய சட்டமா அதிபர் பதவி வெற்றிடமாக இருக்கும்போது அந்த வேலையை வேறு யாரும் செய்ய முடியாது என்பது சட்ட நிலமையாகும்.

இதுவரை இருந்த சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் தனது பெயரைக் கெடுத்துக் கொள்ளாமல் 60 வயது பூர்த்தியானதும் ஓய்வு பெற்று வீட்டுக்குச் சென்று விட்டார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் அடுத்த சிரேஷ்ட நிலையில் இருப்பவர் சொலிஸிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி அயிஷா ஜினசேன அம்மையார். துணிச்சலாக முடிவெடுத்து காரியங்களை ஆற்றும் சிறந்த சட்டத்தரணி என்று மதிக்கப்படுபவர். இப்போது அவருக்கு சட்டமா அதிபர் பதவி வழங்கப்படுமானால் அவர் இன்னும் ஆறு மாதங்கள் அந்தப் பதவியில் இருந்து ஓய்வு பெறலாம்.

ஆனால் புதிய ஒரு சட்டமா அதிபரை நியமிப்பதற்குப் பரிந்துரைக்க வேண்டி நேர்ந்தால், இவரைத் தாண்டி, அடுத்த நிலையில் இருக்கும் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பாரிந்த ரணசிங்கவை (யூனியர்) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சட்டமா அதிபர் பதவிக்கு பரிந்துரைக்கக் கூடும் எனச் செய்திகள் அடிபடுகின்றன. இவர் முன்னர் நற்பெயரெடுத்த முன்னாள் பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்கவின் மகன். தந்தையைப் போலவே இவருக்கும் சட்டத்துறையில் நல்ல மதிப்பு உண்டு.

எது, எப்படியாயினும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட நிலைமைகளைக் குழப்பி, குசும்பு பண்ணும் தமது வழமையான நரித் தந்திரக் கைவரிசையை இவ்விடயத்திலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காட்டியே தீருவார் என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.

எல்லாம் நாட்டின் தலையெழுத்து...!



# தமிழ் நாட்டிற்கு நல்ல தலைவர்கள் தேவை; த.வெ.க. தலைவர் நடிகர் விஜய் தெரிவிப்பு



"நாம் மருத்துவம், பொறியியல் மட்டும் தான் நல்ல துறை என்று நினைத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால் இன்றைக்கு நமக்கு அதிமாக தேவைப்படுவது நல்ல தலைவர்கள் தான்."

– இவ்வாறு நடிகரும் தமிழக வெற்றிக் கழக தலைவருமான விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகம் 2024 ஆம் ஆண்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கல்வி விருது விழாவினை நேற்று நடாத்தினார்.

இந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே விஜய் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் விஜய் மேலும் தெரிவிக்கையில்,

"உங்களுக்கு பிடித்த துறை தேர்வு செய்துகொள்ளுங்கள். வீட்டில் உள்ள பெற்றோர்களிடமும், ஆசிரியர்களிடமும் கலந்து பேசி நல்ல துறையை தேர்வு செய்யுங்கள்.

நாம் ஒரு துறையை தேர்வு செய்யும்போது அதில் எவ்வளவு தேவை இருக்கின்றன என்பதைப் பார்ப்போம். மருத்துவம், பொறியியல் மட்டும் தான் நல்ல துறை என்று நினைத்துக் கொண்டு இருக்கிறோம்.

ஆனால், மருத்துவர்களும், பொறியாளர்களும், வழக்குரைஞர்களும் நிறையப் பேர் இருக்கிறார்கள். இன்றைக்கு நமக்கு அதிமாக தேவைப்படுவது நல்ல தலைவர்கள் தான்.

தலைவர் என்பது அரசியல் ரீதியாக மட்டுமல்ல. எந்தத் துறையில் சிறந்து விளங்கினாலும் அந்தந்த துறைகளில் தலைமைப் பதவிக்கு வர முடியும்.

எதிர்காலத்தில் அரசிலும் கூட ஒரு வேலைவாய்ப்பு வழிகாட்டியாக இருக்கலாம். நன்கு படித்தவர் அரசியலுக்கு வர வேண்டும். நல்ல தலவர்கள் வேண்டுமா? வேண்டாமா? என்பதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

சமூக வலைதளத்தில் ஒரு சில அரசியல் கட்சிகள் செய்யும் பொய் பிரசாரங்களை மாணவர்கள் நம்பக் கூடாது. அது சில நேரங்களில் புரளியாக கூட இருக்கலாம்." – என்றார்.

இதன்போது, மாணவர்கள் நல்ல நண்பர்களை தேர்வு செய்ய வேண்டும் சுய ஒழுக்கம் கட்டுப்பாடு அவசியம் என்றும் தற்காலிக மகிழ்ச்சிக்கு போதை பழக்கங்களுக்கும் அடிமையாகக் கூடாது எனவும் அறிவுறுத்தினார்.

மேலும், " போதைப் பொருள்களை பயன்படுத்தக் கூடாது என்று மாணவர்களை உறுதிமொழியையும் ஏற்க வைத்துள்ளார்.









# இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை

## எஸ் .ஜெய்சங்கர் தெரிவிப்பு

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ் .ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கலாநிதி எஸ். ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார்.

அந்த கடிதங்களுக்கு பதில் கடிதம் அனுப்பி வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இதனை தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் நலன் காப்பதில் இந்திய மத்திய அரசு அதிக முன்னுரிமை கொடுத்திருப்பதாக கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க 10 ஆண்டுகளாக அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், மீனவர்களை விடுவிக்க கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 1974 ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாகவே மீனவர் பிரச்சினை தோற்றுவிக்கப்பட்டதாக கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்த 214 இந்திய மீனவர்கள் 28 படகுகளுடன் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# மாநிலங்களவையில் மயங்கி விழுந்த புலோ தேவி எம்.பியால் பரபரப்பு

இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவையில் நேற்று பெண் எம்.பியொருவர் மயங்கி விழுந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பி. புலோ தேவி நேதம் என்பவரே இவ்வாறு மயங்கி விழுந்துள்ளார்.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் நேற்று நீட் விவகாரம் குறித்து விவாதம் நடத்த வேண்டும் என வலியுறுத்தி 'இண்டியா' கூட்டணியைச் சேர்ந்த எதிர்க்கட்சி எம்.பிக்கள் தொடர் முழக்கங்களை எழுப்பியுள்ளனர்.

இதன்போது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பி. புலோ தேவி நேதம், திடீரென மயங்கி கீழே சரிந்தார்.

இதைக் கண்ட அவைத் தலைவர் ஜகதீப் தன்கர், உடனடியாக அவருக்கு உதவி செய்யும்படி அருகில் இருந்த எம்.பி.க்களிடம் கேட்டுக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து அவை ஒத்திவைக்கப்பட்ட நிலையில், காங்கிரஸ் எம்.பி. புலோ தேவிக்கு முதலுதவி சிகிச்சைகள் அளிக்கப்பட்டு, பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு புலோ தேவிக்கு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், அவரது உடல்நலம் சீராக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் பின்னர், மாநிலங்களவை மீண்டும் தொடங்கியபோது, நீட் விவகாரம் குறித்து விவாதிக்க அனுமதி மறுத்ததால் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடன் மறுசீரமைப்பு செயல்முறை வெற்றியடைவதன் மூலம் இலங்கைக்கு 17 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்மை

## வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



"இருதரப்பு கடன் வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்பு செயல்முறை வெற்றியடைவதன் மூலம் இலங்கைக்கு சுமார் 17 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்மை கிடைக்கும். அத்துடன், சர்வதேச பிணைமுறிகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை வெற்றியடையச் செய்வதற்கு இந் நிலைமை உதவும்."

– இவ்வாறு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2022 ஏப்ரல் 12 ஆம் திகதி, குறிப்பிட்ட அளவு வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்த இலங்கை முடிவு செய்தது. அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 600, 700, 1000 ஆக உயரும் என்று, அன்று சிலர் குற்றம் சாட்டினர். ஆனால் நாம் அந்த நிலைமையைக் கட்டுப்படுத்தினோம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில், கடனை மறுசீரமைக்குமாறு எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

அதற்காக லாசார்ட் நிறுவனத்தை எமது பிரதிநிதியாகவும், சட்ட விடயங்களுக்காக கிளிபர்ட் ஹான்ஸ் நிறுவனமும் நியமிக்கப்பட்டன. இதன்போது, நாம் முதலில் உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்க நடவடிக்கை எடுத்தோம்.

இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போதும் பலதரப்பு நிறுவனங்களின் கடனை செலுத்துவதற்காக ஒரு நாடாக நாம் செயற்பட்டு வந்தோம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை இருதரப்பு கடன் வழங்கும் நாடுகளுடன் கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக முடித்துள்ளோம். இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து இருதரப்பு கடன் முகாமைத்துவத்திற்கான உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவை உருவாக்கி அதற்காக செயற்பட்டன. அதே சமயம் சீனாவுடனும் பேச்சுவார்த்தை நடத்தினோம். இவை அனைத்தினதும் முடிவில், நாம் வெற்றி பெற்றுள்ள–துடன், கடனை திருப்பிச் செலுத்தும் நிலைபேறான நாடாக மாறியுள்ளோம். இந்த வெற்றியின் மூலம் இலங்கைக்கு சுமார் 17 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்மை கிடைக்கும். மேலும், நமது நாட்டுக்கு மேலும் பல்வேறு விதமான நன்மைகள் கிடைக்கும். மேலும், சர்வதேச பிணைமுறிகள் வைத்திருப்பவர்களுடனான பேச்சுவார்த்தைகளை வெற்றியடையச் செய்வதற்கு இந்த வெற்றி உதவும் என்பதைக் கூற வேண்டும். இப்போதும் அது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

அதேபோன்று, சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முழுமையான கடன் மறுசீரமைப்பு முன்னெடுக்கப்படுகின்றது என்பதையும் கூற வேண்டும். மொத்தக் கடன் தொகையை மொத்த தேசிய உற்பத்தியில் 95 வீதம் வரை குறைக்க வேண்டும். மேலும், வெளிநாட்டுக் கடனுக்கான தற்போதைய வட்டியை மொத்த தேசிய உற்பத்தியில் 4.5 வீதம் வரை குறைக்க வேண்டும்."– என்றார்.

# சம்மாந்துறையில் இ.போ.ச. பஸ் வீதியை விட்டு விலகி விபத்து!





(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

கல்முனை – அம்பாறை பிரதான வீதியில் வங்களாவடி எனும் இடத்துக்குச் சற்றுத் தொலைவில் நேற்று இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது உயிர்ச் சேதங்கள் எதுவும் இல்லை. விபத்துக்குக்கான காரணம் தெரியவரவில்லை.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# புத்தளத்தில் மோசமடைந்து வரும் காட்டு யானைகளின் தொல்லை!

(ரஸீன் ரஸ்மின்)

காட்டு யானைகளின் தாக்குதலால் புத்தளம் – மஹா கும்புக்கடவல பிரதேச செயலகத்தின் கட்டடங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன், அதன் அருகில் உள்ள சந்தையையும், கடையொன்றையும் அவௌ சேதப்படுத்தியுள்ளன எனவும் மஹாகும்புக்கடவல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலை காட்டு யானையொன்று மஹாகும்புக் கடவல பகுதிக்குள் நுழைந்து அட்டகாசம் செய்ததாகவும், அங்கு சில கடைகளை தாக்கிய போது, பிரதேசவாசிகளால் விரட்டியடிக்கப்பட்ட நிலையில் அது மீண்டும் வருகை தந்து சேதப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

மேலும், மஹாகும்புக்கடவல பிரதேச செயலகத்தில் புதிதாக திறக்கப்பட்ட கட்டடம் ஒன்றையும் தாக்கிய காட்டு யானை, ஆனமடுவ பிரதேச சபைக்கு சொந்தமான தனியாருக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட கடையொன்றையும் கடுமையாக சேதப்படுத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் மாவட்டத்தின் கருவலகஸ்வெவ, ஆனமடுவ, மஹாகும்புக்கடவல உள்ளிட்ட பல பகுதிகளில் இவ்வாறு தொடர்ச்சியாக அத்துமீறி நுழையும் காட்டு யானைகள் விவசாய நிலங்கள், பாடசாலைக் கட்டடங்கள், வீடுகள் மற்றும் பயன்தரும் மரங்கள் என்பனவற்றையும் சேதப்படுத்தி வருகின்றன எனவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும், மக்கள் வாழும் கிராமங்களுக்குள்ளும் இந்த காட்டு யானைகள் நுழைந்து மக்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது.

யானைக்கூட்டங்கள் வல்பாலுவ தேக்குமர காடு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தொடர்ந்து தங்கி கிராமங்களுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதிகளில் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த கடந்த காலங்களில் யானை வெடிகளை வனஜீவராசி திணைக்களம் பொதுமக்களுக்கு வழங்கியுள்ளது.

எனினும், யானைகளின் அச்சுறுத்தல் தொடர்ந்த வண்ணமே காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, காட்டு யானைகளைக் கட்டுப்படுத்துவதுக்கு மாற்று வழியை ஏற்படுத்தித்தருமாறு பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.









# நாட்டை முன்னேற்றிச் செல்வதற்கான இயலுமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமே உள்ளது

## இத்தேபானே தம்மாலங்கார மகாநாயக்க தேரர் தெரிவிப்பு

"நாட்டை முன்னேற்றிச் செல்வதற்கான இயலுமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மட்டுமே உள்ளது. எனவே நாட்டின் முன்னேற்றத்திற்கான ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கு ஒட்டுமொத்த மகா சங்கத்தினதும் ஆசி கிட்டும்."

– இவ்வாறு கோட்டே ஸ்ரீகல்யாணி சாமகிரி தர்ம மகா சங்க சபையின் தலைவரும், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் வேந்தருமான கலாநிதி அக்கமஹா பண்டித வண. இத்தேபானே தம்மாலங்கார மகாநாயக்க தேரர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கொட்டாவ ருக்மலே ஸ்ரீதர்ம விஜயாலோக மகா விகாரையின் தலைமை மகாநாயாக்க தேரரை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டதன் பின்னர் நிகழ்த்தப்பட்ட விசேட அனுசாசனத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி முதலில் விகாரைக்குச் சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அதனையடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மகாநாயக்க தேரரின் நலம் விசாரித்ததுடன், சிறு கலந்துரையாடலில் ஈடுபட்டமையுடன், விகாரையின் அபிவிருத்திப் பணிகளையும் பார்வையிட்டார்.



இலங்கை தற்போது அடைந்து வரும் பொருளாதார மற்றும் நிதி முன்னேற்றம் குறித்து தேரருக்கு விளக்கமளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடு மீண்டும் இவ்வாறானதொரு பாதாளத்தில் வீழ்ந்துவிடாமல் இருக்க நாட்டை புதிய பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும் எனவும் அதற்காக எதிர்வரும் வருடங்களில் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் எனவும் குறிப்பிட்டார்.

நாடு பேரழிவை எதிர்கொள்ளவிருந்த வேளையில் ஜனாதிபதிப் பதவியை ஏற்குமாறு வண.இத்தேபானே தம்மாலங்கார நாயக்க தேரர் விடுத்த அழைப்பை இதன்போது நன்றியுடன் நினைவு கூர்ந்த ஜனாதிபதி, குறுகிய காலத்திற்குள் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வருவதற்கு அன்று தான் தீர்மானித்தார் எனவும், நாட்டுக்காக முன்வர விருப்பம் தெரிவித்த அனைவரினதும் ஆதரவைப் பெற்று மிகக் குறுகிய காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர முடிந்ததாகவும் குறிப்பிட்டார்.

இவ்வாறான நெருக்கடிகளை எதிர்நோக்கிய உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது இலங்கைக்குக் கிடைத்த தனித்துவமான வெற்றியாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர் சங்கங்கள் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நாட்டின் அனைத்துப் பிள்ளைகளின் கல்வியும் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்த ஜனாதிபதி, தொழிற்சங்க நடவடிக்கைகள் நிறுத்தப்படாவிட்டால் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில், கொட்டாவ, ருக்மலே ஸ்ரீ தர்ம விஜயாலோக மகா விகாரையின் விகாராதிகரி, வண, பெலவத்தே புண்யரதன தேரர் மற்றும் விகாரையின் நன்கொடையாளர் சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.







# பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எழுதிய நூல் ஜனாதிபதி தலைமையில் வெளியிடப்பட்டது

முப்பது வருடகால யுத்தத்தை நிறைவு செய்ய சிறந்த தலைமைத்துவத்தை வழங்கிய முன்னாள் இராணுவத் தளபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவினால் "இராணுவ தளபதி தேசத்துக்கு வழங்கிய வாக்குறுதி – இந்த யுத்தம் அடுத்த தளபதி வரையில் நீடிக்க இடமளியேன்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட நூல் வெளியீட்டு விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று கொழும்பு நெலும் பொக்குன கலையரங்கில் நடைபெற்றது.

இதன்போது புத்தகத்தின் முதல் பிரதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவினால் ஜனாதிபதிக்கு வழங்கி வைக்கப்பட்டது.

அதனையடுத்து பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஜனாதிபதிக்கு நினைவு பரிசு ஒன்றையும் வழங்கி வைத்தார்.

இதன்போது பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் சேவைக்குப் பாராட்டு தெரிவித்த ஜனாதிபதி, யுத்தத்தை வெற்றிகொண்டது மாத்திரமன்றி, பல்வேறு அரசியல் சவால்களுக்கும் முகம்கொடுத்தவர் என்ற வகையில் எதிர்காலத்தில் நாட்டிற்கு பெரும் சேவையாற்ற முடியும் என்றும் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க –

"பீல்ட் மார்ஷல் அந்தஸ்த்தை சரத் பொன்சேகா மட்டுமே வகிக்கிறார். அவர் யுத்த சவால்களை வெற்றிக்கொண்ட அதேநேரம் அதற்கு வெளியில் அரசியல் சவால்களுக்கும் முகம்கொடுத்திருந்தார்.

யுத்த காலத்தில் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன ஊடாகவே இவரை நான் அறிந்துகொண்டேன். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன என்னோடு சமீபமாக பழகியவர். இந்த அதிகாரிக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது அதற்கான வாய்ப்பை உருவாக்கி கொடுக்குமாறு சிசில் வைத்தியரத்ன கூறினார். யுத்தம் ஆரம்பித்த காலத்திலும் அதற்கு பிற்பட்ட காலத்திலும் அரசாங்கத்திலிருந்த நான் யுத்தத்தில் பங்கெடுத்திருந்த பெரும்பாலான அதிகாரிகளை அறிவேன். அப்போது பல்வேறு சிறந்த அதிகாரிகள் உருவானதோடு அவர்களின் வரிசையில் சரத் பொன்சேகாவுக்கு சிறந்த இடம் காணப்பட்டது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஜயசிக்குரு போராட்டம் தோல்வியை தழுவியதால் இராணுவம் கைப்பற்றிய பலவற்றை இழக்க நேரிட்டது. அந்த நேரத்தில் நான் பிரதமராக பதவி வகித்ததோடு, யாழ்ப்பாணத்தை யாரிடம் கையளிப்பது என்ற கேள்வி காணப்பட்டது. அப்போது பலர் இறந்து போயிருந்ததோடு, காயங்களுக்கும் உள்ளாகியிருந்ததால் படையினர் எண்ணிக்கை குறைந்திருந்தது. யாழ்ப்பாணத்துக்கான படைப்பிரிவொன்று அவசியமென சிலர் கூறினர். அப்போது நான் சரத் பொன்சேகாவிடம் யாழ்ப்பாணத்தை ஒப்படைப்போம் என இராணுவ தளபதியிடம் கூறினேன். அதன்படியே செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

அவர் வீழ்ந்த இடத்தில் எழுந்து யுத்த வெற்றியை நோக்கி நகர்ந்தார். அதற்காக கஷ்டமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. யுத்தம் என்பது கிரிக்கட் போட்டியை போன்றதல்ல. உயிரிழப்புக்கள் ஏற்படும். சொத்துக்கள்

தொடர்ச்சி▼







# பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எழுதிய நூல் ஜனாதிபதி தலைமையில் வெளியிடப்பட்டது

தொடர்ச்சி▲

இழக்கப்படும். அதற்கு மத்தியிலும் யுத்தத்தை வழிநடத்திச் செல்லும் வல்லமை அவரிடம் இருந்தது.

உலகத்தில் மிக் மோசமான யுத்தமொன்றுக்கே நாம் முகம்கொடுத்தோம். மற்றைய நாடுகளில் இன்றும் அவ்வாறான யுத்தங்கள் காணப்படுகின்றன. ஆப்கானிஸ்தான் யுத்தம் இலங்கைக்கு முன்னதாக ஆரம்பமானது. அந்த வகையில் சரத் பொன்சேகா தனது பொறுப்பை சரிவர செய்திருக்கிறார்.


அதேபோல் சிவில் வாழ்க்கையிலும் அவர் பல சவால்களை எதிர்கொண்டிருக்கிறார். அதன்போது அவர் தனிமைப்பட்ட வேளைகளிலும், சிறையிடப்பட்ட வேளையிலும் வலுவான மனிதராக உருவாகினார். அதனால் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோடு கலந்துரையாடி சரத் பொன்சேகாவிற்கு பீல்ட் மார்ஷல் அந்தஸ்த்து வழங்கப்பட்டது. அதற்கு தகுதியானவர் என்ற வகையில் அவரும் ஏற்றுக்கொண்டார்.

அரசாங்கம் என்ற வகையில் சரத் பொன்சேகாவின் தெரிவை கொண்டு நாம் பயனடைந்தோம். அவர் போராட்ட குணம் கொண்டவர். யுத்த களத்திலும் அரசியல் களத்திலும் போராட்டத்தை கைவிடவில்லை. அவரால் நாட்டுக்கு இனியும் சேவையாற்ற முடியும். அவரின் சேவைகளை நாம் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.” – என்றார்.

இந்த நிகழ்வில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உரையாற்றுகையில் –

“படையினரின் அர்ப்பணிப்பின் பலனாகவே யுத்தத்தை வெற்றிகொள்ள முடிந்தது. ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான வீரர்கள் உயிர்த் தியாகம் செய்தனர். பெருமளவானவர்கள் அங்கவீனமடைந்தனர். அதற்கான கௌரவத்தை அனைத்து இராணுவ வீரர்களின் குடும்பத்துக்கும் தெரிவிக்கிறேன். நமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்காகவே அவர்கள் உயிர்த்தியாகம் செய்தனர். அதேபோல் நாட்டில் சமாதானத்தையும் ஏற்படுத்தினர்.

யுத்தத்தை நிறைவு செய்ய அரசியல் தீர்வை எட்ட வேண்டுமென பலரும் கூறினர். நான் இராணுவ தளபதியாக பொறுப்பேற்ற வேளையிலும் பாதுகாப்பு படை வீரர்கள் கவலையுடனேயே இருந்தனர். இருப்பினும் நாம் முப்பது வருட யுத்தத்தை வெற்றிகொண்டோம். இராணுவ வீரர்களின் இரத்தம், வியர்வை சிந்தப்படமால் அளப்பரிய அர்ப்பணிப்புக்கள் செய்யப்படாதிருந்தால் யுத்தத்தை வெற்றிகொண்டிருக்க முடியாது. யுத்தத்தின் பின்னர் இந்நாட்டு மக்களும் ஆட்சியாளர்களும் இராணுவ வீரர்களுக்கு உரிய மரியாதையை வழங்கியிருந்தனரா என்பது கேள்விக்குறியாகும்.” – என்றார்.










**உரலார் கேள்வி :- தமிழர்கள் ஜே.வி.பி. கட்சியினரை ஆதரிப்பதில் தவறில்லை என்பதுபோல் சென்ற வாரம் பதில் சொல்லியிருக்கிறீர்கள். இதுவரை ஆட்சி அனுபவம் ஏதுமில்லாத அவர்களை நம்பி அவர்களுக்கு வாக்களிப்பது மண்குதிரையை நம்பி ஆற்றைக் கடக்க முனைவது போல் ஆகாதா?**

**உலக்கையார் பதில் :-** உங்கள் கேள்வியில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. இன்று பொருளாதாரத்தில் ஆட்டங்கண்டிருக்கும் இலங்கையை நிமிர்த்தி எடுப்பது என்பது இலேசான காரியமல்ல. அதற்கு வெறும் புரட்சி மனப்பான்மை மட்டும் போதாது என்பது நிச்சயமான உண்மையே. ஏற்கனவே நடந்த ஜனாதிபதிக்கு எதிரான புரட்சி கூட, அதிசயிக்கத்தக்க



அளவில் வளர்ந்து, முடிவில் ஒன்றுமில்லாமல் போனதைக் கண்கூடாக நாம் கண்டிருக்கிறோம். அந்த புரட்சிக் குழுவிற்குப் பின்னால் ஜே.வி.பியின் கரங்களும் இருந்ததாகச் சொல்லப்பட்டது.

எனவே ஒரு முழு நாட்டை நிர்வகிக்க புரட்சி மனப்பான்மை மட்டும் போதாதென்றே தோன்றுகிறது. அது மட்டுமல்லாமல், ஜே.வி.பி.யினுடைய பழைய வரலாற்றைத் திருப்பிப் பார்த்தால், அவர்களிடம் பொதிந்திருக்கும் ஒரு சர்வாதிகாரப் போக்குத் தெளிவாய்த் தெரிய வரும். அது அவர்களுக்கான உலக அங்கீகாரத்திற்கு நிச்சயம் தடையாக இருக்கும் என்றும் தோன்றுகிறது.

ஆட்சி அனுபவமின்மை, பழைய வரலாற்றினால் உலக அங்கீகாரம் பெறுவதில் உள்ள தடை என்பவை நிச்சயம் ஜே.வி.பி.இன் வெற்றிக்குப் பெரும் தடைக்கற்களாய் இருக்கப் போவது உண்மை. அது மட்டுமல்லாமல் தற்செயலாய் ஒருமுறை இவர்கள் வென்றால் கூட, பெரும்பான்மைச் சிங்களவர்களிடம் இன்றும் இருக்கும் தமிழர்களுக்கு எதிரான மனநிலை, இவர்களைத் தொடர்ந்து ஆட்சிபீடத்தில் இருக்க அனுமதிக்குமா என்பதும் கேள்விக்குரிய ஒன்றாகவே இருக்கிறது.

இங்ஙனமாய்த் தமது நிலைத்தல் தன்மையில் ஐயப்பாடுடைய ஓர் அரசினை நம்பி இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பக் கடன் வழங்குதற்காய் பிறநாடுகள் முன்வருமா என்பதும் ஐயத்திற்குரிய ஒன்றேயாம்.

இந்நிலையில் ஆட்டங்கண்டிருக்கும் இலங்கையின் அரச சிம்மாசனத்தை ஜே.வி.பி.யினரால் உறுதி செய்ய முடியுமா என்பது கேள்விக்குரிய விடயமாகவே தோன்றுகிறது. அப்படியிருக்க உறுதிப்பாடில்லாத அவர்களை நம்பித் தமிழர்கள் பின் செல்வதால் நம் இனத்திற்குப் பயனேதும் இருக்க முடியுமா என்பது 'ஆயிரம் டொலர்' கேள்வியாகவே இருக்கிறது.

சென்றமுறை நான் வேறொரு பார்வையில் தான் பதில் சொன்னேன். தொடர்ந்து நம்மை ஏமாற்றிய இரண்டு பெருங் கட்சிகள் இதுவரை நமக்கு ஏதும் செய்யவில்லை. இனிச் செய்யப் போவதுமில்லை என்பது உறுதியான விடயம் என்று தெரிவதால் மூன்றாம் அணியைப் பின் பற்றிப் பார்த்தால் என்ன என்பதுதான் நான் சொல்ல வந்த விடயம். யார் கண்டது? நம் விதி நன்றாக இருந்தால் சில அதிசயங்கள் நடந்தாலும் நடக்கலாம் என்பதால்தான் சென்ற வாரப் பதிலில் அம்முடிவினைச் சொன்னேன். அது எமது வெற்றிக்கான நிச்சயமான பாதை என்று நினைந்து அப்பதிலைச் சொல்லவில்லை. அவ்வளவுதான்!

**சல்லடையார் சலிப்பு :- போன கிழமை வரும் எண்டார்.... இந்தக் கிழமை வராது என்கிறார்...**
**இவரும் 'வரும், ஆனா வராது' எண்ட கட்சிக்காரர் போல.**

++++++++++++++

**உரலார் கேள்வி :- நடந்து முடிந்த கம்பன் விழாவின் பெரு வெற்றி உங்களுக்கு எதனை உணர்த்தியது?**

**உலக்கையார் பதில் :-** நாங்களே சற்றும் எதிர் பாராத வெற்றிதான் அது. நான்கு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் நடத்தியதால், முன்பு விழாக்கள் நடாத்திய அனுபவங்கள் எல்லாம் ஓரளவு மறந்து போய் இருந்தது. கிட்டத்தட்ட முதன்முதலாக ஒரு விழாவினை நடாத்தும் மனநிலையிலேயே இம்முறை விழாவினை

தொடர்ச்சி ▼

தொடர்ச்சி▲

நடாத்தத் தொடங்கினோம்.

35க்கு மேற்பட்ட வெளிநாட்டு விருந்தினர்கள், 25க்கு மேற்பட்ட உள்நாட்டு விருந்தினர்கள், ஆறு தமிழகப் பேச்சாளர்கள், அதைவிட அதிகமான உள்நாட்டுப் பேச்சாளர்கள் என விருந்தினர்களின் வருகையே எங்களைச் சற்றுத் திகைக்க வைத்தது. தங்குமிடம், உணவு, வாகனப் போக்குவரத்து என விருந்தினருக்கான ஒழுங்குகளைக் கவனிப்பதற்குள் எங்களின் முதுகெலும்பு முறிந்து போய்விட்டது.

அதை விட நாட்டியம், நாடகம், நாதஸ்வரம், தனிப்பாடல்கள், நாளுக்கொன்றாய் மாற்றிய மேடை அலங்காரம் என விழாவிற்கான எங்கள் வேலைகள் அதிகரித்துக் கொண்டே போயின. இலக்கண ஆசிரியர்கள் சொன்னது போன்று 'குன்று முட்டிய குருவியாயும், குறிச்சி புக்க மானாயும் திகைத்து நின்றோம்.'

ஏற்கனவே எங்கள் சக்திக்கு மீறியதான அளவில் கம்பன் விழாக்களை நடாத்திவிட்டது தவறோ என்று கூடத் தோன்றியது. கடைசியாக



பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியத்திற்கு 'கம்பன் புகழ்' விருதளித்த விழாவில் உலகப் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்காரவிற்கும் விருதளித்ததால் அவ்விழா கூட்ட நெரிசலால் திக்குமுக்காடியது. அப்படி ஒரு விழாவை நடத்திவிட்டு அதைவிடக் குறைவான ஒரு விழாவை நடாத்தினால் அது கழக மரியாதையைக் குறைத்துவிடும் என அஞ்சினோம். தவழ்ந்த காலால் நடக்கலாம், நடந்த காலால் தவழ முடியுமா?

இத்தகைய கேள்விகள் ஒரு பக்கம், மழைவிட்டுத்தருமா எனும் ஐயம் இன்னொரு பக்கம். பணிகள் செய்ய ஆட்களில்லாத வறுமை ஒரு பக்கம் என, இடர்க்கடல்கள் பல மேலோங்கி நின்றன. சினிமா, தொலைக்காட்சித் தொடர்கள் என்பவற்றைக் கைவிட்டு விழாவிற்கு மக்கள் வருவார்களா? என்றெல்லாம் அஞ்சினோம்.

ஆனால் எம் மக்கள் எங்களைக் கைவிடவில்லை. டீ.வி.த் தொடர்களைத் தாண்டியும், இடை இடையே பெய்த மழையைத் தாண்டியும் விழாவிற்கு மக்கள் வந்து குவிந்தார்கள். மின்விசிறிகள் போதாமையால் மண்டபத்திற்குள் இருந்த வெம்மை அதிகரித்து வேர்த்துக் கொட்டக் கொட்ட, அந்த சிரமத்தைச் சிறிதும் பொருட்படுத்தாது மூன்று நாள்களும் வந்து குவிந்த இலக்கிய இரசிகர்களைக் கண்டு அளவில்லாத பெருமை கொண்டோம். பாடுபட ஆள்கள் இல்லையே என்ற குறையைத் தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த எனது திருக்குறள் மாணவர்களும், இங்குள்ள சில கழக இரசிகர்களும் தகர்த்தெறிந்தார்கள்.

வெளிநாடுகளிலிருந்து வந்திருந்தவர்களெல்லாம் ஈழத்தமிழர்களின் கலை, இலக்கிய ஆர்வத்தினைக் கண்டும், விழாவில் குவிந்த இரசிகர்கள் கூட்டத்தைக் கண்டும் வியந்து போனார்கள். இலங்கைக் கம்பன் விழாவில் கலந்து கொள்வது என்பது, இப்போதெல்லாம் பேச்சாளர்களுக்கான ஒரு தகுதியாக மாறிவிட்டது.

இதென்ன? அவர்களது விழாவை அவரே புகழ்ந்து கொள்கிறார்? என்று நினைக்கிறீர்களா? தவறுதான்! இது தற்புகழ்ச்சியன்று 'ஆசை பற்றி அறையும்' அறியாமை அவ்வளவே! இங்கே சொல்லப்பட்டது எங்களின் பெருமை மட்டுமல்ல, ஈழத்தமிழர்களின் பெருமையுமாம் என்று உணர்ந்து மன்னிப்பீர்களாக!.

**சல்லடையார் சலிப்பு :-'வியவற்க எஞ்ஞான்றும் தன்னை'..... ஹீ... ஹீ....ஹீ**
**வாரிதியாருக்கே வள்ளுவம்...........**
**இது எப்படி இருக்கு?**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :- என்னையா? சுமந்திரன், ஸ்ரீதரன் பிரச்சினை எப்போதுதான் தீரப் போகிறது?**

**உலக்கையார் பதில் :-** வேதாளத்தின் கேள்விகளுக்குச் சரியான விடை சொல்லி விக்ரமாதித்தன் என்று அதனை முருங்கை மரத்திலிருந்து இறக்குகிறானோ? அன்று அவர்களின் பிரச்சுனையும் தீர்ந்து விடும் என்று நினைக்கிறேன்

**சல்லடையார் சலிப்பு :- வாரிதியார் இன்னும் 'அம்புலி மாமா'வ மறக்கேல போல.............**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :- அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இந்த ஓகஸ்ட் மாதத்தோடு பாராளுமன்ற உறுப்பினராய் 30 ஆண்டுகள் தொடர்ந்து இருந்த சாதனையைப் புரிந்திருக்கிறாரே, அவர் பற்றிய உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளுங்களேன்.**

**உலக்கையார் பதில் :-** அவர் சாதனையாளர் தான் என்பதில் எனக்கு ஐயமேதுமில்லை. வலிமையோடு இருந்த புலிகளின் கைக்கு அகப்படாமல் அவர்களால் வந்த பல ஆபத்துக்களைக் கடந்து, இன்று வரை நின்று பிடிப்பதே பெரிய சாதனைதான்.

பேரின அரசாங்கங்களுடன் சேர்ந்து நின்றதால் மட்டும் அவரை இனத்துரோகி என்று



சொல்வதில் நியாயம் இருப்பதாய் எனக்குப் படவில்லை. தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் காக்க வேண்டிய கடமை இருந்ததால் ஓர் இயக்கத்தின் தலைவராய் அவர் அரசாங்கங்களிடம் சரண் புகுந்ததை நான் பிழை என்று சொல்ல மாட்டேன்.

தொடர்ச்சி▼

தொடர்ச்சி ▲

எல்லா இயக்கங்களும் தமக்கு ஆபத்து வந்த போது, தம்மைப் பாதுகாக்கவென எதிர் அணி சார்ந்த பெரிய சக்திகளிடம் சரணடைந்த மையை வரலாற்றில் நாம் கண்டிருக்கின்றோம்.

மற்ற இயக்கங்கள் செய்யாத பெருங் குற்றம் எதனையும் டக்ளஸ் செய்து விட்டதாகத் தோன்ற வில்லை. புலிகளிடம் 'ஞானஸ்நானம்' பெற்ற தால் மட்டுமே மற்றைய ஆயுதக் குழுக்கள் சில இன்று மக்கள் அங்கீகாரம் பெற்று நிற்கின்றன. மற்றும்படிக்கு அவர்களுக்கும், டக்ளஸுக்கும் அதிக வேற்றுமை இருப்பதாய்த் தோன்றவில்லை.

அந்த அங்கீகாரம் நோக்கியும், தனது முடிவை மாற்றாமல் தனித்து நின்ற டக்ளஸின் ஆளுமையையும் நாம் வியப்புடன் பார்க்க வேண்டியே இருக்கிறது. நிராகரிக்க முடியாது.

திட்டு வாங்குவேன் என்று தெரிந்து கொண்டே சொல்கிறேன். இன்றைக்குள்ள நம் தலைவர்க ளுக்குள் நிர்வாகத் திறமை கொண்டவர்களை வரிசைப்படுத்தினால் டக்ளஸ் 'விரற்கு முன் நிற்கும் வீரனாய்த்' திகழ்வார் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

வயது பாராமல், தனிவாழ்வைத் துறந்து, தரப்படும் அமைச்சுக்களை எல்லாம் தனது சுறுசுறுப்பான உழைப்பால் தன்வயப்படுத்தி வெற்றி கண்டு நிற்பது அவரது மற்றொரு திறமை. சிங்கள, ஆங்கில மொழிகளில் பெரிய பயிற்சி இல்லாத போதும் மாற்றினத் தலை வர்களோடும், வெளிநாட்டவரோடும் குற்ற உணர்ச்சி ஏதுமின்றித் தெரிந்த பாஷையை வைத்துக் கொண்டு காரியம் சாதிக்கும் அவரது வல்லமை பாராட்டத்தக்க ஒன்று.

அவர் மனதில், தன்னைச் சார்ந்தவர்களை மட்டும் காக்க வேண்டும் என்ற ஒரு எண்ணம் இருப்பதும், 30 ஆண்டுகள் அரசியல் அனுபவத் திற்கு பின்பும், தனது இருப்பை ஓர் இயக்கத் தலைவரின் இருப்பைப் போலவே பேணி நிற் பதும், பெரியாரைத் துணைக் கோடாமல் சமூ கத்தைவிட்டுத் தனித்து நிற்பதும் அவரது குறை களாகத் தோன்றுகின்றன.

தமிழரசுக்கட்சி போன்ற நீண்ட வரலாறுள்ள ஓர் கட்சியை எதிர்த்துத் தனித்து நின்று மக்கள் மனதைக் கவரவேண்டுமானால், அவர் தன் நிர்வாகத்தில் தகுதியுள்ள கிளைகளையும், விழுதுகளையும் பரப்பியாக வேண்டும்.

தமிழ் மக்கள் தனக்கு ஆதரவு தரவில்லை என்கின்ற குறையொன்று டக்ளஸ் மனதில் எப்போதும் இருக்கின்றது. அதற்கான காரணத் தினை அவர் ஆராய வேண்டியது அவசிய மாகும். எவ்வளவுதான் உயர்ந்து நின்றாலும் ஒரு தனிமரம் தோப்பாகப் போவதில்லை. ஒரு தனி மனிதரை மட்டும் நம்பி நிற்கும் ஒரு கட்சி யின் பின்னால் மக்கள் எப்படி வருவார்கள்?

'டக்ளஸ்க்கு அப்புறம் யார்?' என்ற கேள்விக்குச் சமூகத்திற்கு மட்டுமல்ல, அவர் கட்சியினர்க்கே விடை தெரியுமா என்று தெரியவில்லை. தனியொரு வரை நம்பிய ஒரு கட்சி ஒரு சமூகத்தின் அடை யாளமாய் எப்படி மாறமுடியும்? அறிஞர்களை யும், ஆற்றலாளர்களையும் தன் கட்சியில் இணைத்துக் கொண்டு, அக்கட்சி நிர்வாகத்தில் ஓர் ஜனநாயக முறைையைக் கொண்டுவந்தால் தான் அவர்மேலும், அவர் கட்சியின் மேலும் மக்களுக்கு நம்பிக்கை பிறக்கும்.

நானா? நீயா? என்று சுமந்திரனும், ஸ்ரீதரனும், நிலைமை உணராமல் என்னதான் மக்குத் தனமாகச் சண்டை பிடித்துக் கொண்டாலும், அங்ஙனம் சண்டை பிடிக்கும் உரிமை தந்து அக்கட்சி ஜனநாயகம் பேணுகிறது என்ற அளவில் தான் மக்கள் அக் கட்சியை ஆதரித்து நிற்கி றார்கள். அந்த வகையில் ஈ.பி.டி.பி.கட்சியும் தனது 'குடம்பி' நிலையை மாற்றி என்றைக்கு வண்ண வண்ணமான வண்ணாத்துப்பூச்சிக ளைப் பறக்க விடப்போகிறதோ அன்று தான் அக்கட்சி மக்கள் மயப்படும் என்பது திண்ணம்.

ஆளுமை, ஆற்றல், திறமை என்பவற்றோடு தனி ஒரு மனிதராய் ஈ.பி.டி.பி. கட்சியினைக் கட்டி ஆண்டு, 30 ஆண்டுகளாகப் நாடாளுமன்ற உறுப்பினராய் தொடர்ந்திருந்து சாதனை புரிந் திருக்கும் டக்ளஸ் அவர்களிடம் ஒரு கேள்வி. உங்கள் கட்சியை மேலும் பயணிக்கச் செய்ய உங்கள் அளவான ஆற்றலுள்ள வேறெவரும் உங்களுக்குள் இருக்கிறார்களா? இக் கேள்விக்கு விடை சொல்லாவிட்டாலும் இக்கேள்விக்கான விடையைக் கண்டுபிடிப்பதுதான் உங்களின் முதல் கடமையாக வேண்டும் என்று நினைக் கிறேன்.

**சல்லடையார் சலிப்பு :- வாயைக்குடுத்து வாங்கிக்கட்டுறதில வாரிதியாருக்கு ஏதோ சந்தோசம் போல. 'யார் அங்கே கச்சேரி தொடங்கட்டு ம்'........ஹீ......ஹீ.......ஹீ!**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

# குற்றப்புலனாய்வுப் பிரிவினால் சஞ்சய மஹவத்த கைதானார்



"என்னிடமிருந்து நாட்டுக்கு" அமைப் பின் தலைவர் சஞ்சய மஹவத்த குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய் யப்பட்டு, எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக் களத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு குறித்து கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய, அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத் திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரினால் இந்த முறைப்பாடு முன் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.




# தொலைத்தொடர்பு கம்பிகளை நீண்ட நாள்களாக களவாடி வந்த நால்வர் மஸ்கெலியாவில் சிக்கினர்

**(மஸ்கெலியா சி.ரி.பெருமாள்)**

தொலைத்தொடர்பு கம்பிகளை நீண்ட நாள்களாகக் களவாடி வந்த நால்வரை மஸ்கெலியா பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைது செய்து உள்ளனர்.

கைது செய்யபட்டவர்கள் நேற்று ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்படவிருந்தனர் என மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

பெறுமதி மிக்க தொலைத்தொடர் புக் கம்பிகொக் கடந்த 2022 ஆண்டு முதல் தொடர்ந்து களவாடி வந்த நால் வரை ஹட்டன் வலய பொலிஸ் அதி காரி நிப்புன தெஹிகம மற்றும் உதவி அதிகாரி ஜயசிங்கஆகியோரின் பணிப் புரையில் மஸ்கெலியா பொலிஸ் அதி காரி புஷ்பகுமார மற்றும் புலத்சிங்கள, சார்ஜன்ட் ரெங்கரன், புவிராஜ், நவு ஷாட், பிரேம் குமார் ஆகியோர் சுற்றி வளைப்பை மேற்கொண்ட போது ஏழ ரைக் கிலோ செம்பு, 27கிலோ 500 கிராம் தொலை தொடர்பு கம்பிகள் மற்றும் ஐந்து கிலோ அலுமினியம் ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

தாங்கள் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் என மஸ்கெலியா பொலிஸ் அதிகாரிகள் கூறினர்.

மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார கருத்து தெரிவிக்கையில் –

கடந்த இரண்டு வருடங்களாக ஹட்டன் தொலை தொடர்பு நிறுவன அதிகாரி சுதர்மன் மஹிந்த ஹேவாகே சுமார் 7 முறைப்பாடுகள் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து உள்ளார். மஸ்கெலியா தொலை தொடர்பு நிலையத்தில் இருந்து நல்ல தண்ணி, மறே, மவுசாகல, லக்கம், புரவுன்லோ மற்றும் கஷ்டப் பிரதே சங்களுக்கு செல்லும் தொலை தொடர்பு கம்பிகள் வெட்டப் பட்டு உள்ளன.

கைது செய்யப்பட்ட நான்கு பேரிட மிருந்தும், கம்பிகள், செம்பு, அலு மினியம் மற்றும் ஓட்டோ ஒன்றும் பொலிஸ் பொறுப்பில் எடுக்க பட்டு உள் ளன. – என்றார்.






# ஓய்வூதியர்களின் கொடுப்பனவுகளையும் மீளாய்வு செய்து நீதி வழங்க வலியுறுத்து

## ஓய்வூதியர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய இயக்க உப தலைவர் முக்தார் கோரிக்கை

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

அரச ஊழியர்களது சம்பளங்களை மீளாய்வு செய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள உதய செனவிரட்ண குழுவானது ஓய்வூதியர்களின் கொடுப்பனவுகளையும் மீளாய்வு செய்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும். இல்லையேல் இதற்கென பிரத்தியேகமான மீளாய்வுக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று ஓய்வூதியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் உப தலைவரும் ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளருமான ஏ.எல். முஹம்மட் முக்தார் மகஜர் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துளளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

2016–2019 வரையான காலப்பகுதியில் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு 2020 ஆம் ஆண்டு வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய அதிகரிப்பை நிறுத்தி வெளியிடப்பட்ட பொது நிருவாக சுற்றறிக்கை 35/2019 (1) இல் ஓய்வூதியர்களின் கொடுப்பனவு முரண்பாடுகளை நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமெனக் கூறப்பட்டது.

அதன் பின் 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ஓய்வூதியர்களின் கொடுப்பனவு முரண்பாடுகளை நீக்குவதற்காக சுமார் 500 மில்லியன் ரூபா அப்போது நிதி அமைச்சராக இருந்த பஸில் ராஜபக்ஷவினால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் 04 வருடங்களாகியும் எதுவும் நடைபெறவில்லை. அவ்வாறாயின் ஒதுக்கப்பட்ட 500 மில்லியன் ரூபாவுக்கு என்ன நடந்தது?

பொதுவாக சேவையில் உள்ள அரச ஊழியர்களது சம்பளங்கள் மீளாய்வு செய்யப்படும்போது ஓய்வூதியம் பெறுவோரது ஓய்வூதியமும் மீளாய்வு செய்யப்படுவதும் இதன்போது சேவையில் உள்ள உத்தியோகத்தர்களது அதிகரிப்பில் 70 சதவீத அதிகரிப்பு ஓய்வூதியர்களுக்கு வழங்குவதும் ஒரு வழமையான நிருவாக நடைமுறையாகும்.

ஆனால் தற்போது அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள. அதிகரிப்பு வழங்கப்படுகின்ற போது ஓய்வூதியர்களுக்கு 7,000 ரூபா வழங்குவதற்குப் பதிலாக வெறும் 2,500 ரூபாவே வழங்கப்படுகிறது. அதுவும் ஏப்ரல் மாதம் முதலே வழங்கப்படுகிறது. ஆனால் அரச ஊழியர்களுக்கு ஜனவரி முதல் வழங்கப்படுகிறது. இவ்வாறு பல அநீதிகள் ஓய்வூதியர்களுக்கு இழைக்கப்பட்டு வருகிறது.



ஆகையினால் நாடாளாவிய ரீதியில் உள்ள சுமார் 6,80,000 அரச ஓய்வூதியதாரர்களது கொடுப்பனவு முரண்பாடுகளையும் குறிப்பாக 2016/2019 வரையான காலப்பகுதியில் ஓய்வுபெற்ற சுமார் 1,80,000 அரச ஊழியர்களது கொடுப்பனவு முரண்பாடுகளையும் ஆராயும் வகையில் உதய செனவிரட்ண குழுவிற்கு பணிப்புரை வழங்கப்பட வேண்டும். அல்லது இதற்கென தனியானதொரு குழு நியமிக்கப்பட வேண்டுமென நாம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். – என்றார்.

# பஸ் கட்டணங்களை குறைக்கத் தீர்மானம்




எதிர்வரும் முதலாம் திகதி முதல் பஸ் கட்டணங்களை 5 வீதத்தால் குறைக்க பஸ் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

போக்குவரத்து அமைச்சில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பஸ் சங்கங்களை சேர்ந்தவர்களும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகளும் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர்.

புதிய பஸ் கட்டண திருத்தத்தின் பிரகாரம், குறைந்தபட்ச பஸ் கட்டணமாக 28 ரூபா அறிவிக்கப்பட்டுள்ளது.



# இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தேசிய மாநாடு!

(கல்லடி செய்தியாளர்)

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான தேசிய மாநாடு மட்டக்களப்பு வில்லியம் ஓல்ற் கேட்போர் கூடத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் சு.அ.டெஸ்மன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,சிறப்பு அதிதிகளாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கா, இலங்கை ஆசிரியர் சேவை பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க, இலங்கை ஆசிரியர் சேவை சங்க தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப், இலங்கை ஆசிரியர் சேவை சங்க உபதலைவர் அபூபக்கர் ஆதம்பாவா, இலங்கை ஆசிரியர் சேவை சங்க ஊடகப் பொறுப்பாளர் எஸ்.பி.பாலமுருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.











# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்டம்



(வாஸ் கூஞ்ஞ)

நாங்கள் கேட்பது இழப்பீடையோ மரணச்சான்றிதழையோ அல்ல. முறையான நீதி விசாரணையையே கோரி நிற்கின்றோம் என தெரிவித்து மன்னார் நகரில் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சங்கம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை பத்து மணியளவில் மன்னார் நகரில் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சங்கம் ஒரு மணி நேரம் கவனவீர்ப்புப் போராட்டததில் ஈடுபட்டது.

தங்கள் கைகளில் பதாதைகளை ஏந்தியவாறு அவர்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். சர்வதேசம் இதுவரை தங்கள் கோரிக்கைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளாதிருக்கின்றது எனவும், உள்நாட்டு விசாரணையைத் தவிர்த்து, சர்வதேசமே! காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவினர்கள் தொடர்பான விசாரணையை மேற்கொள் என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இவர்களின் போராட்டம் நடைபெற்றது.














# சர்வதேச சமுத்திர நீர்ச் சறுக்குக் கண்காட்சி அறுகம்பைக் கடற்கரையில் நடத்த ஏற்பாடு!

**(பழுவூரான்)**

Benita Vacanze நிகழ்வு ஏற்பாட்டாளர்களினால் சர்வதேச சமுத்திர நீர்ச் சறுக்குக் கண்காட்சி (International Surfing Expo - SriLanka 2024) இலங்கையில் நடாத்தவுள்ளமை தொடர்பான விசேட ஊடக சந்திப்பொன்று மட்டக்களப்பு செங்கலடியில் நேற்று இடம்பெற்றது.

சர்வதேச அனுபவம் மற்றும் பெருமைமிக்க இலங்கையர் என்ற வகையில் கிழக்கு மாகாணத்தைச் சுற்றுலாத் துறையின் ஊடாக உயர்த்துவதற்காக அறுகம்பை கடற்கரையில் சர்வதேச சர்வதேச சமுத்திர நீர்ச் சறுக்குக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளதாக இந்த ஊடக சந்திப்பின் போது ஜோர்ஜ் நியூமன் அழகையா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் –

இந்த சர்வதேச சமுத்திர நீர்ச் சறுக்குக் கண்காட்சி போட்டி நிகழ்விற்கு 150 இற்கு மேற்பட்டநாடுகளை அழைத்துள்ளோம். இதில் கிட்டத்தட்ட 50 நாடுகளை சேர்ந்த உறுப்பினர்கள் இந்த நிகழ்வுக்கு வருவார்கள் என உறுதிப்படுத்தியுள்ளனர். அனுசரணையாளர்கள் எம்முடன் இணைந்து இந்த நிகழ்வை மேலும் சிறப்புள்ளதாக்க்ச் இந்நிகழ்விற்கு அனைவரையும் அழைத்துள்ளனர்.

இந் நிகழ்வின் முக்கிய நோக்கமாக கடல் சூழல் மற்றும் இயற்கை சூழலை பாதுகாப்பது, இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதும் சமுத்திர நீர்ச் சறுக்கு விளையாட்டை மிகவும் பிரபலமாக்குவது போன்றவை உள்ளன.

கிழக்கு மாகாணத்தில் இளம் தலைமுறையினர் கல்விகற்க உதவுவதையும், போரினால் பாதிக்கபட்ட விதவைகளுக்கு கண்ணியமான வாழ்க்கை வாழ உதவுவதையும் இலக்காகக் கொண்ட ஜோர்ஜ் அழகையா

அறக்கட்டளை இலங்கை சுற்றுலாவை மேம்படுத்த நிதி திரட்டுவதற்காகவும் இந்தக் கண்காட்சியை நடாத்த திட்டம் தீட்டியுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.








# மன்னார் துறைமுகத்தில் முனையம் நிர்மாணிக்க விலைமனுக் கோரல்!

மன்னார் துறைமுக முனைய நிர்மாணப் பணிகளுக்கான விலைமனு கோரப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, மன்னார் துறைமுகத்தில் 300 மீற்றர் நீளமான முனையம் நிர்மாணிக்கப்படவுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன்சந்திர தெரிவித்தார்.

இதற்காக உள்ளூர் முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என அவர் கூறினார்.

முனையத்தின் நிர்மாணப் பணிகளின் பின்னர் இந்தியா - இலங்கைக்கு இடையில் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்துக் கப்பல் சேவையை முன்னெடுப்பதற்கான வசதிகள் இலகுவாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாக அறிவித்து அரசாங்கத்தினால் வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# மஹிந்த ராஜபக்ஷ சீனாவின் பழைய நண்பர்: சீனப் பிரதி வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அந்த நாட்டின் பிரதி வெளியுறவுத்துறை அமைச்சர் சன் வெய்டோங்கை நேற்று சந்தித்தார்.

தலைநகர் பீஜிங்கில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

2014 ஆம் ஆண்டு சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் தொடர்பில் இதன்போது நினைவுகூரப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ சீனாவின் பழைய நண்பர் என சீனப் பிரதி வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சீன அரசாங்கத்தின் அழைப்பிற்கிணங்க முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்டோர் சீனாவுக்குச் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரச நிறைவேற்று அதிகாரிகளின் மாதாந்த கொடுப்பனவு 10,000 ரூபாவால் அதிகரிப்பு

அரச நிறைவேற்று அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மாதாந்த நிறைவேற்று கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.



அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சினால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக, 15 ஆயிரம் ரூபாவாக காணப்பட்ட கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் புதிய திருத்தம் நடைமுறைக்கு வரும் என குறிப்பிட்டு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 29.06.2024

## மேஷம்

இன்று உங்கள் பொறுமை சோதனைக் குள்ளாகும் நாள். முறையான தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் பிரியமான ஒருவருடன் மோதல் ஏற்படலாம். இன்று சிறந்த பலன்களைக் காண நீங்கள் உங்கள் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்த வேண்டும்.

கடின உழைப்பின் மூலம்தான் வெற்றி காண முடியும். பணியிடத்தில் சமயோசித புத்தியை பயன்படுத்த வேண்டியது அவசியம்.

உங்கள் மனக்குழப்பத்தை உங்கள் துணையிடம் காண்பிக்காதீர்கள். அமைதியான மனநிலையில் இருப்பது சிறந்தது.

இன்று நிதிநிலை சராசரியாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இயலாது. அதற்கு நீங்கள் சிறு கடன்கள் வாங்குவீர்கள்.

## ரிஷபம்

நீங்கள் விருந்துகளில் கலந்து கொள்ள நேரலாம். மற்றும் உங்களுக்கு பிரியமானவர்களை உங்கள் வீட்டுக்கு அழைக்க நேரலாம். உங்கள் முயற்சியின் மூலம் உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும்.

நீங்கள் உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். என்றாலும் பதற்றத்திற்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக இருக்க முயல்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நீங்கள் சிறிய கடன் வாக நேரலாம். மேலும் இழப்பு ஏற்படாமல் இருக்க சிறிது பணத்தை சேமியுங்கள்.

தாயின் உடல் நலத்துக்காகச் செலவு செய்வீர்கள். பெரிய அளவில் பாதிப்பு இருக்காது எனவே கவலை வேண்டாம்.

## மிதுனம்

உங்கள் வாழ்வில் சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் செயல்களை இன்று விரைந்து ஆற்றுவீர்கள்.

வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் உற்சாகமாக நடந்து கொள்வீர்கள். அவருடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்கும். நீங்கள் விரைந்து பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று துடிப்பாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

உங்கள் அணுகுமுறையில் வன்மையை தவிர்க்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். நிறைவேறாத உங்களின் லட்சியங்களுக்காக வருந்த வேண்டாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சிறப்பாக திட்டமிட்டால் முன்னேற்றம் காணலாம்.

நட்பான அணுகுமுறை மற்றும் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையுடனான நட்பை இனிமையாக்கலாம்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் செலவுகளை கண்காணியுங்கள்.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.

## சிம்மம்

உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். இன்று வெற்றி காணப்பதற்கு முறையாக திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை முடித்து ஒப்படைப்பதற்கு முன் கவனமாக சரி பார்க்க வேண்டும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். ஆனால் பூர்வீகச் சொத்து அல்லது எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. அதிகப் பணிகள் காரணமாக தலைவலி ஏற்படலாம்.

## கன்னி

இன்று நீங்கள் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். எந்தச் செயலிலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திறம்பட ஆற்றுவதற்கு நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. எனவே அமைதியாக இருப்பது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். அனாவசியமாக பணம் செலவாகாமல் காத்துக் கொள்ளுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக தலைவலி ஏற்படலாம். காயம் ஏற்படாமல் இருக்க வாகனம் ஓட்டும்போது கவனமாக இருக்க வேண்டும்.

## துலாம்

தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் வெற்றி காணலாம். உங்கள் நலம் விரும்பிகள் மற்றும் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். இன்று நீங்கள் சிறப்பாக செயல்படுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் திறமைக்கு பாராட்டு பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

அதிர்ஷ்டம் காரணமாக ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் இன்று பண வரவு ஏற்படும்.

இன்று நிறைந்த ஆற்றலுடன் இருப்பீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## விருச்சிகம்

இன்று நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தினால் உங்கள் லட்சியங்களை அடையலாம். சிறந்த பலனைக் காண இன்று கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் செயற்றிறன் சிறப்பாக இருந்தாலும் நீங்கள் முழு திருப்தியடைய மாட்டீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணத்தை கவனமாகக் கையாளவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.06.2024




இன்று சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். பிறருடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் தொடர்பாடலை கட்டுப்படுத்த வேண்டும்.

அதிக பதட்டம் காரணமாக பணியின் போது தவறுகள் செய்தது போல உணர்வீர்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் இருவரும் நல்ல புரிந்துணர்வையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வீர்கள்.

உங்களால் இன்று பணம் சம்பாதிக்க இயலும். என்றாலும் வீணான செலவு காரணமாக நீங்கள் சேமிக்க இயலாது.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படும்.




பிரச்சினை அல்லது மனக் குழப்பம் காரணமாக இன்றைய நாளை அனுபவிக்கும் மனநிலை உங்களிடம் இருக்காது. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காத காரணத்தினால் நீங்கள் ஏமாற்றமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் நல்லுறவை வளர்ப்பீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதித்தாலும் தவிர்க்கமுடியாத செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை தக்க வைத்துக்கொள்ள இயலாது.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




உங்கள் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்களை நீக்காவிடில் உங்கள் வளர்ச்சி பாதிக்கும். மதிப்பு மிக்க பொருளை இழக்க வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.

இன்று சில நிதி கட்டுப்பாடுகள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை காண நீங்கள் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

செரிமானம் மற்றும் கண் சம்பந்தமாக பிரச்சினைகள் இன்று காணப்படும்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாக உற்சாகமாக இருப்பீர்கள். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.

உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நேர்மையாக வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.










## இருபது-20 உலகக் கிண்ண இறுதியாட்டம் இன்று

# அதிரப்போகும் பிரிட்ஜ்டவுண்

## தீராத் தாகத்தைத் தீர்க்குமா தெ.ஆபிரிக்கா

## 2ஆவது முறை கிண்ணம் நுகருமா இந்தியா?

இருபது-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் இன்று இரவு பிரிட்ஜ்டவுண் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் நீண்டகாலமாக உலகக் கிண்ணத்தை எட்ட முடியாத - தீராத் தாகத்துடன் இருக்கும் தென்னாபிரிக்காவும், ஏற்கனவே ஒரு முறை கிண்ணம் வென்ற முன்னாள் சம்பியனான இந்தியாவும் களம் காணவுள்ளன.

இருபது - 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் நடப்பு தொடரை அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் இணைந்து நடத்தி வருகின்றன.

இந்தத் தொடர் கடந்த இரண்டாம் திகதி தொடங்கியது. 20 நாடுகள் இந்தத் தொடரில் பங்கேற்றன. அவை 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, லீக் முறையில் போட்டிகள் நடத்தப்பட்டன. லீக் முடிவில் நான்கு பிரிவுகளிலிருந்தும் முதலிரு இடங்களைப் பிடித்த அணிகள் சூப்பர்-8 சுற்றுக்குத் தகுதிபெற்றன. அதன்படி இந்தியா, அமெரிக்கா (குழு - ஏ), அவுஸ்திரேலியா, இங்கிலாந்து (குழு - பி), ஆப்கானிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் (குழு - சி), தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் (குழு - டி) ஆகிய அணிகள் தகுதிபெற்றன.

முன்னாள் சம்பியன்களான பாகிஸ்தான், இலங்கை அணிகளுடன் நியூஸிலாந்து, நெதர்லாந்து, அயர்லாந்து, கனடா, ஸ்கொட்லாந்து, நமீபியா, ஓமன், உகாண்டா, பப்புவா நியூ கினியா மற்றும் நேபாளம்

தொடர்ச்சி▼

# இருபது-20 உலகக் கிண்ண இறுதியாட்டம் இன்று

# அதிரப்போகும் பிரிட்ஜ்டவுண்

தொடர்ச்சி ▲

ஆகிய அணிகள் வெளியேற்றப்பட்டன.

சூப்பர்-8 சுற்றுக்குத் தகுதி பெற்ற 8 அணிகளும் 2 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. அதன்படி குழு 1இல் இந்தியா, அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் அணிகளும், குழு - 2 இல் இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா, அமெரிக்க அணிகளும் இடம்பெற்றன.

இதன் முடிவில் இந்தியா, ஆப்கானிஸ்தான், தென்னாபிரிக்கா, இங்கிலாந்து அணிகள் அரையறுதிக்குத் தகுதி பெற்றன. முதல் அரையிறுதியில் தென்னாபிரிக்க அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தானை எளிதில் வீழ்த்தியது. இரண்டாவது அரையிறுதியில் இந்தியா 68 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நடப்பு சம்பியன் இங்கிலாந்தைத் தோற்கடித்தது.

இந்நிலையில் கிண்ணத்துக்கான இறுதிப்போட்டி பிரிட்ஜ்டவுனில் இலங்கை நேரப்படி இன்று இரவு 8 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இதில் இந்தியா-தெனாபிரிக்க அணிகள் களம் காண்கின்றன.

இந்தியா மூன்றாவது முறையாக இருபது-20 உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. 2007ஆம் ஆண்டு நடந்த முதல் இருபது-20 உலகக் கிண்ணத்தில் இந்தியா சம்பியன் பட்டம் வென்றது.

2014ஆம் ஆண்டு இறுதிப்போட்டிக்கு முன்னேறிய இந்தியா, இலங்கையிடம் தோற்றது.

இம்முறை மூன்றாவது தடவையாக இறுதிக்குத் தகுதிபெற்றுள்ள இந்திய அணி, இரண்டாவது முறையாகக் கிண்ணத்தை வெல்லும் முனைப்பில் உள்ளது.

துடுப்பாட்டம், பந்துவீச்சில் சம பலத்துடன் உள்ள இந்தியா, சம்பியன் பட்டத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன.

அதேவேளை மறுமுனையில் மார்க்ரம் தலைமையிலான தென்னாபிரிக்கா முதல் முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. இதுவரை உலகக் கிண்ணத்தை அந்த அணியால் நுகரமுடியவில்லை. எனவே, அந்த அணி சம்பியன் பட்டம் வென்று நீண்ட நாள் தாகத்தைத் தீர்க்கும் வேட்கையில் உள்ளது.

இந்தத் தொடரில் இரு அணிகளும் எந்தவொரு தோல்வியையும் சந்திக்காமல் இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளன. இந்தியா நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. தென்னாபிரிக்கா சில ஆட்டங்களில் போராடியே வெற்றி பெற்றது.

எது எப்படியோ இன்று இரு அணிகளும் மல்லுக்கட்டும் என்பதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

# வெற்றியாளர்கள்

## இருபது-20 உலகக் கிண்ணம்



2007 - இந்தியா



2009 - பாகிஸ்தான்



2010 - இங்கிலாந்து



2012 - மே.இ.தீவுகள்



2014 - இலங்கை



2016 - மே.இ.தீவுகள்



2021 - அவுஸ்திரேலியா



2022 - இங்கிலாந்து

இதுவரை எட்டு தடவைகள் இருபது-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர்கள் நடைபெற்றுள்ளன. இம்முறை ஒன்பதாவது தடவையாக நடைபெறுகின்றது.